## September 1, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. உலகளாவிய வர்த்தகத்தை ஸ்திரமாக்கும் நோக்கில், இந்தியா-சீனா இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை விரிவாக்கவும், வர்த்தகப் பற்றாக்குறையை குறைக்கவும் பிரதமர் நரேந்திர மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் தீர்மானித்தனர்.
   i. இந்தியப் பொருள்கள் மீதான 50 சதவீத வரி உள்பட பல்வேறு நாடுகள் மீதான அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் வரி விதிப்பால் உலக ளாவிய வர்த்தகத்தில் இடர்ப்பாடுகள் நிலவும் சூழலில், மோடி-ஜின்பிங் இடையே நடைபெற்ற சந்திப்பில் மேற்கண்ட ஒருமித்த முடிவுகள் எட்டப்பட்டன.
   ii. இந்திய-சீன ஒத்துழைப்பு, 280 கோடி மக்களின் (இரு நாடுகளின் மொத்த மக்கள்தொகை) நலன்களுடன் பிணைந்துள்ளது. இது, ஒட்டு மொத்த மனித குலத்தின் நன்மைக்கும் வழிவகுக்கும்' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.
   iii. சிறந்த அண்டை நாடுகள் என்ற முறையில் நண்பர்களாக இருப்பதே நமது சரியான தேர்வாகும். பரஸ்பர வெற்றிக்காக, யானையும் (இந்தியா), டிராகனும் (சீனா) இணைந்து நடனமாட வேண்டும் என்று ஷி ஜின்பிங் தெரிவித்தார்.
   iv. ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் சீனாவின் தலைமைக்கு ஆதரவு தெரிவித்த பிரதமர் மோடி, 2026- இல் இந்தியாவில் நடைபெறும் பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க ஷி ஜின்பிங்குக்கு அழைப்பு விடுத்தார். பிரதமரின் சீன வருகை மற்றும் ஆதரவுக்கு அதிபர் ஷி ஜின்பிங் நன்றி தெரிவித்தார் என்று செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.
2. அமெரிக்கா விதித்துள்ள 50 சதவீத இறக்குமதி வரிவிதிப்பு காரணமாக, அங்கு அனுப்பப்பட்ட கடல் உணவுகள் திருப்பியனுப்பப்படும் சூழல் ஏற்பட்டுள்ளதால் தொழிலாளர்களும் ஏற்றுமதியாளர்களும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
   i. அமெரிக்க அதிபராக டிரம்ப் மீண்டும் பொறுப்பேற்ற பிறகு பிறநாடுகளிலிருந்து அமெரிக்காவில் இறக்குமதியாகும் பொருள்கள் மீது கூடுதல் வரி விதித்து வருகிறார்.
   ii. அவ்வகையில், இந்தியப் பொருள்கள் மீது 50 சதவீத வரி விதிக்கப்பட்டு கடந்த (ஆக. 27) அமலுக்கு வந்தது. இதனால், இறால் மீதான 8.5 சதவீத வரி 58.5 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. கணவாய், நண்டு, ஆக்டோபஸ் போன்ற கடல் உணவுகளுக்கு வரியில்லாமலிருந்த நிலை மாறி தற்போது 50 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.
   iii. இதனால், அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகும் கடல் உணவுகள் ஜவுளி, ஆயத்த ஆடைகள், இயந்திர தயாரிப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.
   iv. இந்தியா, உலகின் 3ஆவது பெரிய கடல் உணவு ஏற்றுமதி நாடாகும். மொத்த இறால் உற்பத்தியில் 70 சதவீதம் ஏற்றுமதியாகிறது.
   v. அமெரிக்காவுக்கு மட்டும் ரூ.23,000 கோடி மதிப்பிலான 3,29,192 டன் (மொத்த ஏற்றுமதியில் 40%) கடல் உணவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

vi. 2023-24ஆம் ஆண்டில் அமெரிக்கா, ஜப்பான், சீனா, ஐரோப்பிய நாடுகள், தென் கிழக்கு ஆசிய நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளுக்கு சுமார் ரூ.64,000 கோடி மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட இறால் உள்ளிட்டவை ஏற்றுமதியாகியுள்ளன.

3. இந்திய கடற்படையின் நீர்மூழ்கி கப்பல் திறனை மேம்படுத்தும் நோக்கில், ரூ.1 லட்சம் கோடிக்கும் மேல் மதிப்பிலான 2 புதிய நீர்மூழ்கி கபபல் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை அடுத்த ஆண்டு மத்தியில் இறுதி செய்ய இந்தியா இலக்கு கொண்டுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
   i. முதலாவது திட்டத்தின்கீழ், மூன்று ஸ்கார்பீன் ரக நீர்மூழ்கி கப்பல்களை வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.
   ii. இந்த நீர்மூழ்கி கப்பல்களை அரசுக்கு சொந்தமான மசாகான் கப்பல்கட்டும் பிரான்ஸின் நேவல் குரூப்ஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்கும். இதற்கான ரூ.36,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பாதுகாப்பு அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
   iii. இரண்டாவது திட்டமாக, சுமார் ரூ.65,000 கோடி செலவில் ஆறு டீசல்-எலக்ட்ரிக் நீர்மூழ்கி கப்பல்கள் வாங்கப்பட உள்ளன. இத்திட்டம், 'புராஜெக்ட் 75 இந் தியா' திட்டத்தின்கீழ் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது. ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு கப்பல் கட்டுமான நிறுவனத்துடன் இணைந்து இந்த நீர்மூழ்கி கப்பல்களை மசாகான் நிறுவனம் தயாரிக்கும்.
   iv. ஸ்கார்பீன் நீர்மூழ்கி கப்பல் திட்டம் நிலுவையில் இருந்தாலும், இந்திய கடற்படையின் 'ஐஎன்எஸ் விக்ராந்த்' விமானம் தாங்கி கப்பலில் பயன்படுத்துவதற்காக 26 ரஃபேல் போர் விமானங்களை ரூ.64,000 கோடிக்கு வாங்குவதற்கான ஒப்பந்தத்தை இந்தியாவும் பிரான் ஸும் கடந்த ஏப்ரலில் இறுதி செய்தன என்பது குறிப்பிடத் தக்கது.

4. ஆஸ்திரேலியாவில் நடை பெற்ற குடியேற்ற எதிர்ப்புப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.
   i. 'ஆஸ்திரேலியாவுக்கான பேரணி' என்ற முழக்கத்துடன் சிட்னி உள்ளிட்ட நகரங்களில் நடைபெற்ற இந்தப் பேரணியில் இந்திய வம்சாவளியினர் குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளை போராட்டக்காரர்கள் கையில் ஏந்தி இருந்தனர். ஆஸ்திரேலியாவில் பிற நாட்டவரின் குடியேற்றம் எங்களது சமூகங்களை ஒன்றாக வைத்திருந்த பிணைப்புக்கு எதிராக அமைந்துள்ளது. பெருந்திரளான குடியேற்றத்தை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறோம் என்று இந்தப் பேரணிக்கான வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
   ii. இந்தப் பேரணிக்கு ஆஸ்திரேலிய அரசு எதிர்ப்பு தெரிவித்துள் ளது. மூத்த அமைச்சர் முர்ரே வாட் கூறுகையில், 'வெறுப்பைப் பரப்பும், சமூகத்தை பிளவுபடுத்தும் இதுபோன்ற போராட்டங்க ளுக்கு அரசு ஆதரவு அளிக்காது. நவீன நாஜி குழுக்களால் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என்றார்.
   iii. ஆஸ்திரேலியாவில் இந்திய வம்சாவளியினர் 8.5 லட்சம் பேர் உள்ளனர். இது அந்த நாட்டின் மக்கள்தொகையில் 3 சதவீதம் ஆகும்.

5. பாலஸ்தீனத்தை தனிநாடாக அங்கீகரிக்கப்போவதாக பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் எடுத்துள்ள முடிவால் இஸ்ரேலும் அமெரிக்காவும் அதிருப்தியும் கோபமும் அடைந்துள்ளன.
   i. இஸ்ரேலுக்கும் காஸாவின் ஹமாஸ் படையினருக்கும் இடையே மோதல் தொடர்ந்துவரும் நிலையில், காஸாவில் பஞ்சநிலையை ஐ.நா. அறிவித்துள்ளது.
   ii. இதற்கிடையே, இஸ்ரேல், பாலஸ்தீனம் பிரச்னைக்கு இரு நாடுகள் நடைமுறைதான் தீர்வு எனக் கூறியுள்ள பிரான்ஸ், பாலஸ்தீனத்தை தனி நாடாக செப்டம்பரில் அங்கீகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.
   iii. பிரான்ஸை தொடர்ந்து பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, மால்டா ஆகிய நாடுகளும் செப். 23-ஆம் தேதி தொடங்கும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்கப்போவதாக அறிவித்துள்ளன. நியூஸிலாந்து, ஃபின்லாந்து உள்ளிட்ட வேறு சில நாடு களும் இதே முடிவை பரிசீலித்து வருகின்றன.
   iv. இந்நிலையில், பிரான்ஸின் முடிவுக்கு இஸ்ரேலும் அமெ ரிக்காவும் அதிருப்திதெரிவித்துள்ளன. பாலஸ்தீனத்தைதனி நாடாக அங்கீகரிப்பது பயங்கரவாதிகளுக்குத்தான் ஊக்கம் அளிப்பதாக அமையும் என இரு நாடுகளும் கூறியுள்ளன.
6. ஜப்பானில் செப்டம்பரில் (13–21) நடைபெற வுள்ள உலக தடகள சாம்பியன்ஷிப்பில் பங்கேற்பதற்கான இந்திய அணியை, 19 பேருடன் இந்திய தடகள சம்மேளனம் அறிவித்தது.
   i. போட்டியின் வரலாற்றில் முதல்முறையாக, ஆடவர் ஈட்டி எறிதலில் 4 இந்தியர்கள் களம் காணவுள்ளனர். கடந்த எடிஷனில் (2023) தங்கம் வென்ற நீரஜ் சோப்ரா, இந்த முறையும் பதக்கம் வெல்வார் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.
7. பிரிக்ஸ் நாடுகளுக்கு எதிரான அமெரிக்காவின் பாரபட்சமான பொருளாதாரத் தடை, வரிகள் விதிப்பை ரஷியாவும், சீனாவும் எதிர்க்கிறது என்று ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் தெரிவித்தார்.
   i. பிரிக்ஸ் நாடுகள் மீது 10% கூடுதல் வரி விதிக்க இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ள நிலையில் புதின் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.
8. 2025-ஆம் ஆண்டுக்காண ரமோன் மகசேசே விருதுக்கு எஜுகேட் கேர்ள்ஸ் (பெண்களுக்கு கல்வி கொடுங்கள்) என்ற இந்திய தொண்டு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.
   i. இதன்மூலம், இந்திய நிறுவன மொன்று முதல்முறையாக இந்த விருதை வென்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.
   ii. நோபல் பரிசுக்கு இணையாக ஆசியாவில் வழங்கப்படும் விருதாக ரமோன் மகசேசே விருது கருதப்படுகிறது. ஆசிய கண்டத்தில் வசிக்கும் மக்களுக்கு தன்னலமற்ற பொதுச்சேவைகள் வழங்குவோரை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது ஆண்டுதோறும் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

iii. நிகழாண்டு நவ.7-ஆம் தேதி பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் நடைபெறவுள்ள 67-ஆவது ரமோன் மகசேசே விருது வழங்கும் விழாவில் விருது பெறுபவர்களின் பட்டியலை ரமோன் மகசேசே விருது அறக்கட்டளை வெளியிட்டது.

iv. இதுகுறித்து அந்த அறக்கட்டளை வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'பள்ளிப் படிப்பை இடைநிறுத்திய பெண் குழந்தைகள் மற்றும் பள்ளி செல்லாத பெண் குழந்தைகளுக்கு கல்வி வழங்கும் பணியை மேற்கொண்டு வரும் எஜுகேட் கேர்ள்ஸ் நிறுவனம், மாலத்தீவைச் சேர்ந்த ஷாஹினா அலி (சுற்றுச்சூழல் மேம்பாடு) மற்றும் பிலிப்பின்ஸைச் சேர்ந்த ஃபிள வீனோ ஆண்டனியோ (ஏழை எளிய மக்கள் வாழ்க்கை மேம்பாடு) ஆகியோர் நிகழாண்டுக்கான ரமோன் மகசேசே விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்' எனத் தெரிவிக்கப்பட்டது.

v. இந்த விருது எஜுகேட் கேர்ள்ஸ் நிறுவனத்துக்கு மட்டுமின்றி இந்தியாவுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்கது என அந்த அமைப்பின் நிறுவனர் ஷஃபீனா ஹுசைன் தெரிவித்தார்.

9. தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 38 சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணம் உயர்வு நள்ளிரவு முதல் அமலுக்கு வந்தது. நாடு முழுவதும் 1,44,634 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலையில் 892 சுங்கச்சாவடிகள் செயல்பட்டு வருகின்றன.

    i. தமிழ்நாட்டில் 6,606 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 82 சுங்கச்சாவடிகளும், மாநில நெடுஞ்சாலைகளில் 7 சுங்கச்சாவடிகளும் செயல்பட்டு வருகின்றன. இதில் 78 சுங்கச் சாவடிகளில் சுங்கக்கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகின்றன. இந்தச் சுங்கச்சாவடிகளில் இரு கட்டங்களாகக் கட்டணம் உயர்த்தப்படும் என மத்திய அரசு அறிவித்தது. அதன்படி, கடந்த ஏப்ரலில் 40 சுங்கச்சாவடிகளில் ரூ.25 வரை சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டது

    ii. செப்டம்பரில் மீதமுள்ள சுங்கச்சா வடிகளுக்கும் கட்டணத்தை உயர்த்துவதுடன், தொடர்ந்து ஆண்டு தோறும் கட்டணத்தை உயர்த்திக் கொள்ளவும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அனுமதி அளித்துள்ளது.